# மாகாண பொது நிர்வாக செயலகம், வட மாகாணம்

# පළාත් රාජ්‍ය පරිපාලන කාර්යාලය, උතුරු පළාත

# PROVINCIAL PUBLIC ADMINISTRATION SECRETARIAT, NORTHERN PROVINCE


தொடர் இல: / යොමු අංකය: / Ref No:

எனது இல: / මගේ අංකය / My No: NP/02/18/GN/01

07.01.2010

**மாகாணப் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம்: NP/02/2010(01)**

அமைச்சின் செயலாளர்கள்
பிரதிப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
வட மாகாணம்

**<u>அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 29/98 க்கமைய ஆங்கில மொழித் தேர்ச்சிக்கான ஒன்றுக்கு மேற்பட்ட மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவு</u>**

மேற்படி விடயம் தொடர்பாக, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 29/98 சார்பான மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவுக்கான அனுமதிக்கு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் பொழுது, வட மாகாண நிர்வாகத்தின் கீழ் பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுதல் அவசியமாக்கப்படுகின்றது.

1. ஆங்கில மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்கும் அலுவலர், அம் மொழி மூலமான கடமைகளை ஆற்ற ஆரம்பித்த காலப்பகுதி குறிப்பிட்டு திணைக்களத் தலைவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
2. இக் கொடுப்பனவுக்காக விண்ணப்பிப்பவர்கள் குறித்த மொழி மூலமான கடமைகளை ஆற்றுவதற்கான முழுத் தகைமையையும் பெற்றிருப்பதுடன், அம் மொழிக்கான கடமைகளை ஆற்ற ஆரம்பித்த திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதிக்குள் விண்ணப்பித்தல் அவசியமாகும்.
3. ஆங்கில மொழிக் கடமைகளை ஆற்ற ஆரம்பித்த காலப்பகுதி திணைக்களத் தலைவரால் குறிப்பிடப்பட்டு சிபார்சு செய்யப்படாதவிடத்து விண்ணப்பமானது அனுமதிக்கும் அதிகாரிக்குக் கிடைக்கப்பெறும் திகதியைக் கருத்தில் கொண்டு அவரால் எடுக்கப்படும் தீர்மானத்தின் அடிப்படையிலான திகதியே கொடுப்பனவுக்கு வலுவுடைய திகதியாகக் கொள்ளப்படும்.

எனவே, மேற்படி விடயங்களை கருத்தில் கொண்டு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 29/98 சார்பான மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவுக்கான விண்ணப்பங்களை அனுமதிக்கும் அதிகாரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*தி.இராசநாயகம்*
பிரதிப் பிரதம செயலாளர்

பிரதி: பிரதம செயலாளர், பிரதம செயலாளர் செயலகம், வட மாகாணம்


கன்னியா வீதி, வரோதயநகர், திருக்கோணமலை, இலங்கை.
කන්නියා පාර, වරෝදයනගර්, ත්‍රිකුණාමලය, ශ්‍රී ලංකාව.
Kanniya Road, Varothayanagar, Trincomalee, Sri Lanka.

Gen Office : 026-3266502
Fax : 026-2226959
DCS : 026-3267571
: 026-2226959
Email : npminppa@sltnet.lk
Website : www.np.gov.lk

எனது இல – பீ.எச்/ பீ/ பீ 1/ 08/19
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு – 07.
10 பெப்ரவரி , 2010.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்.

**2001 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியச் சட்டம்**
**அரசாங்க சேவையில் பெண் அலுவலர்களின் விருப்புரிமையைப் பிரயோகித்தல்**

13/ 2001 ஆம் இலக்க 2001.07.04 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் மீது தங்களின் மேலான கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் பெண் அலுவலர்களின் விருப்புரிமையைப் பிரயோகிப்பதற்கான இறுதித் திகதியை 2010.06.30 ஆந் திகதி வரை நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

03. சுற்றறிக்கையின் ஏனைய நிபந்தனைகள் மாற்றமில்லாது தொடர்ந்திருக்கும்.

ஒப்பம் / டீ. திசாநாயக்க.
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1639/27 - 2010 පෙබරවාරි 05 වැනි සිකුරාදා - 2010.02.05
*1639/27 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் சட்டம்*

*3 (6) (அ) மற்றும் (ஆ) நிபந்தனையின் கீழான நியமம்*

*2001 ஆண்டின் 2 ஆம் இலக்க தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் (திருத்தங்கள்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் சட்டத்தின் 3 (6) (அ) மற்றும் (ஆ) நிபந்தனைகளினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இறுதியாக இன்னும் ஒரு முறை மட்டும் விருப்பினைத் தெரிவிப்பதற்கான காலத்தினை நீடிப்பதற்கு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம ஆகிய நான், இந்நியமத்தினால் -*

* *01.08.1983 ஆந் திகதியில் அரச சேவையில் இருந்த பெண் அலுவலரினால் ஓய்வூதியத் திட்டத்திற்கு விருப்பினைத் தெரிவிக்க முடிவு செய்ய இயன்றது எத்திகதிக்கு முன்னரோ அத்திகதி 30.06.2010 ஆகவும் ;*

* *பெண் அலுவலர் ஓய்வு பெற்றிருப்பின் அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பங்களிப்புப் பணம் மற்றும் வட்டி 180 தவணைகளில் அறவிடப்பட வேண்டும் எனவும், அது ஓய்வூதியச் சுற்றுநிருபம் 3/2008 இற்கு அமைவாக வேண்டுமெனவும்;*

* *இன்னும் பெண் அலுவலர் இறந்திருப்பின் குறித்த பங்களிப்புப் பணம், வட்டிக் கொடையிலிருந்து ஒரே தடவையில் கழிக்கப்பட வேண்டும் எனவும், பெண் அலுவலர் சேவையில் இருப்பின் அவர் ஓய்வு பெற முன்னர் மொத்தப் பங்களிப்புத் தொகை மற்றும் வட்டி அறவிடப்பட வேண்டும் எனவும் நியமம் செய்கின்றேன்.*

*கலாநிதி சரத் அமுனுகம,*
*பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.*

*பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,*
*ரொரிங்டன் சதுக்கம்,*
*கொழும்பு -7,*
*2010, சனவரி 28.*

*02 - 477*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

අංක 1639/27 - 2010 පෙබරවාරි 05 වැනි සිකුරාදා - 2010.02.05

(රජයේ බලයපිට ප්‍රසිද්ධ කරන ලදී)

# I වැනි කොටස: (I) වැනි ඡේදය - සාමාන්‍ය

## රජයේ නිවේදන

1983 අංක 24 දරන වැන්දඹු පුරුෂ සහ අනත්දරු විශ්‍රාම වැටුප් පනත

3 (6) (අ) සහ (ආ) වගන්තිය යටතේ නියමය

2001 අංක 02 දරන වැන්දඹු පුරුෂ සහ අනත්දරු විශ්‍රාම වැටුප් (සංශෝධන ) පනතින් සංශෝධිත 1983 අංක 24 දරන වැන්දඹු අනත්දරු විශ්‍රාම වැටුප් පනතේ 3(6) (අ) සහ (ආ) වගන්ති වලින් මා වෙත පැවරී ඇති බලතල ප්‍රකාර අවසන් වශයෙන් තවත් එක් වරක් පමණක් මනාපය ප්‍රකාශ කිරීමේ කාලය දීර්ඝ කිරීමට රාජ්‍ය පරිපාලන හා ස්වදේශ කටයුතු අමාත්‍ය ආචාර්ය සරත් එල්. බී. අමුණුගම වන මම, මේ නියමයෙන්,

1. 1983.08.01 දිනට රාජ්‍ය සේවයේ සේවා නියුක්ත වූ නිලධාරිනියක් විසින් විශ්‍රාම වැටුප් ක්‍රමය සඳහා මනාපය ප්‍රකාශ කිරීමට තීරණය කරනු ලැබිය හැක්කේ යම් දිනයකට පෙරද, එම දිනය 2010.06.30 ලෙස ද,

2. නිලධාරිනිය විශ්‍රාම ලබා ඇත්නම් අයවිය යුතු හිඟ දායක මුදල් හා වැල් පොළිය වාරික 180 කින් අය විය යුතු බවද, එය විශ්‍රාම වැටුප් චක්‍රලේඛ 3/2008 අනුකූල විය යුතු බවට ද,

3. තවද නිලධාරිනිය මියගොස් ඇත්නම් අදාල දායක මුදල හා පොළිය ප්‍රදානයෙන් එකවර අඩු කළ යුතු බවත්, නිලධාරිනිය සේවයේ යෙදී සිටින්නේ නම් ඇය විශ්‍රාම යාමට පෙර මුළු දායක මුදල හා පොළිය අයකළ යුතු බවත් නියම කරමි.

ආචාර්ය සරත් එල්. බී. අමුණුගම,
රාජ්‍ය පරිපාලන හා ස්වදේශ කටයුතු අමාත්‍ය.

2010 ජනවාරි මස 28 වැනි දින,
කොළඹ 07,
නිදහස් චතුරශ්‍රයේ,
රාජ්‍ය පරිපාලන හා ස්වදේශ කටයුතු අමාත්‍යාංශයේ දී ය.

02-477

1A - G 12402— 930 (2010/02) ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුවේ මුද්‍රණය කරන ලදී.